DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 6

| | | |
|---|---|---|
| Name | : | ரகோத்தமன் (Lw - 7) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **Date : 28.04.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.11.2024ந் தேதி மாலை 03.30 மணியளவில் சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணியிலிருந்தேன்.

அப்போது தினேஷ் என்பவரை அவரது உறவினர்கள் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள். தினேஷை விசாரித்த போது அவரை 07.11.2024ந் தேதி மாலை 03.15 மணியளவில் சிங்களாந்தபுரத்தில் தெரிந்த ஒரு நபர் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு இடதுபுற வயிற்றில் 2 செ.மீ. அளவுள்ள குத்துகாயம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமணைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

07.11.2024ந் தேதி தினேஷ்க்கு சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு வழங்கப்பட்டது. **(**சிங்களாந்தபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக கூறப்படும் ஆயுதம் எதையும் காட்டி போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. காயம்பட்ட தினேஷ் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது சுயநினைவுடன் இருந்தாரா என்றால் சுயநினைவுடன் தான் இருந்தார். வாதி தினேஷ் தன்னை யார் தாக்கினார் என பெயர் குறிப்பிட்டு கூறினாரா என்றால் இல்லை. தினேஷ் தன்னை எந்த ஆயுதத்தால் தாக்கினார் என குறிப்பிட்ட கூறவில்லை என்றால் சரிதான்.

காயம்பட்ட தினேஷ்க்கு நான் சி.டி.ஸ்கேன் எக்ஸ்ரே ஆகியவை எடுத்தேனா என்றால் இல்லை. எத்தனை நாட்கள் என்னிடம் சிகிச்சையில் இருந்தார் என்றால் வந்தவுடன் சிறிது நேரத்தில் முதல் உதவி பெற்றுவிட்டு கிழம்பிவிட்டார். தினேஷ்க்கு ஏற்பட்ட காயங்கள் நிரந்தர சிதைவோ அல்லது உறுக்குழைவோ என்றால் ஆமாம். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் வாதி என்னிடம் சிகிச்சை பெற்ற அன்றே விசாரித்தார்கள். ஒரு நபர் மதுபோதையிலோ அல்லது கூர்மையான கல்லின் மீது விழும்போது இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**